1989 ஏப்ரல் 26]

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறு நகரத்தில் தியாக பிரம்மம் உற்சவம் ஆண்டிற்கு ஒருமுறை சிறப்பாக நடைபெறுகிற நிகழ்ச்சி அங்கே உண்டு. வெளிநாடுகளிலிருந்து கூட ஏராளமானவர்கள் அங்கே வந்து போகிற காரணத்தாலும், அந்தப் பேரூராட்சிப் பகுதியில் மழை பெய்தால் ஏராளமான தண்ணீர் தேங்கி கொசு உற்பத்தி அதிகமாகி அதனால் பல நோய்கள் வருகிற காரணத் தாலும், அரசாங்கத்திற்கு முன்னால் 20,000 ரூபாய் பணம் செலுத்தியிருக்கிற காரணத்தாலும், இவற்றையெல்லாம் மனதில் வைத்து உடனடியாக அந்த பாதாள சாக்கடைத் திட்டத்தை அங்கே கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

ஜனதா கைத்தறிச் சேலைகள் தேக்கம்.

*138—(*வினா எண்-273)—* **திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேங்கிக் கிடக்கும் ஜனதா கைத்தறிச் சேலைகளை அரசே கொள்முதல் செய்யும் செயற் குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜனதா கைத்தறி சேலையை உற்பத்தி செய் கிறவர்கள் படுகின்ற அவதியைக் கணக்கில் கொண்டாவது, அவர்களுடைய வறுமையைப் போக்குவதற்கு இந்தத் திட்டத்தை அமல்படுத்துவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதா துணி உற்பத்தியைப் பொறுத்த வரையில், கைத்தறி வளர்ச்சி ஆணையாளர் அவர்களால் கோ ஆப்டெக்ஸ் மூலம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்த உற்பத்தித் திட்டம் அறிவிக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் சில சங்கங்கள் தரம் குறைவான ஜனதா துணிகளை உற்பத்தி செய்வதாலும், கொடுக்கின்ற உற்பத்தித் திட்டத்திற்கு அதிகமாக உற்பத்தி செய்வதாலும், துணித் தேக்க நிலை ஏற் படுகிறது. தரமான துணியாக இருந்தால் அதை அரசு கொள் முதல் செய்ய பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1989 ஏப்ரல் 26

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜனதா சேலையை உற்பத்தி செய்வதற்கு ஆகின்ற செலவு எவ்வளவு? அதற்கு மாநில அரசும், மத்திய அரசும் எவ்வளவு மானியம் அளிக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதா துணி ரகத்திற்கு மத்திய அரசு சதுர மீட்டருக்கு 2.75 காசு வழங்குகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த ஜனதா ரகத் துணிகளும், தரமாக உற்பத்தி செய்யப்பட்ட துணிகளும் காமராசர் மாவட்டத்தில் உள்ள அனைத்து நெசவாளர் சங்கங்களில் இன்றைக்கு பல கோடி ரூபாய்க்கு தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே ஒரு சிறப்புத் திட்டமாகக் கருதி, இதை கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்தால், நெசவாளர்களுடைய கண்ணீரைத் துடைக்க முடியும். ஆகவே அரசு அவசரகால நடவடிக்கையாக இதை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்ன அரிய கருத்தை ஏற்று, அந்தத் துணிகளுடைய ரகத்தைப் பார்த்து, தரமான துணியாக இருந்தால், அரசு கொள்முதல் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜனதா ரகத்தறிச் சேலைகள், வேட்டிகள தயாரித்து விற்பனை செய்வதிலே மத்திய அரசு ஒரு ஜோடிக்கு 29.50 பைசா கொடுப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறதே, ஆகவே 89 ரூபாய் 50 பைசாவிற்கு அடக்கமாகிற இந்த ஜவுளிகளை 60 ரூபாய்க்கு பொது மக்களுக்கு வேட்டி சேலை கொடுக்கக் கூடிய ஒரு ஏற்பாடாக இருப்பதன் காரணமாக, சாதாரணமாக ஏழை எளியவர்கள், அதுவும் குறிப்பாக கிராமப் புறத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள் வாங்கக் கூடிய இந்தத் துணிகளை அதிகமாக உற்பத்தி பண்ணுவதற்கு ஏற்பாடு செய்வதோடு, மத்தியஅரசு இதற்காக ரூ. 17.50 பைசா சேலைக்கும், 12 ரூபாய் வேஷ்டிக்கும் கொடுக்கக்கூடிய அந்த மானியத் தொகையை அதிகமாகப் பெறுவதற்கு அரசு முயற்சிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன். மேலும் மானியமாக மத்திய சர்க்கார் கொடுப்பதற்கு ஏதாவது லிமிட் இருக்கிறதா அல்லது எவ்வளவு நாம் உற்பத்தி செய்தாலும், அதற்கு ஈடாக மத்திய அரசு மானியம் அளிக்கிறதா என்ற விவரத்தையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, மத்திய அரசு கொடுக்கின்ற நிதியை அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று கைத்தறித் துறையின் மூலமாகக் கேட்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1989 ஏப்ரல் 26]

திரு. இரா. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதா கைத்தறி சேலைகள் மட்டுமல்ல, கைத்தறித் துணிகள் தமிழ்நாட்டிலே ஏராளமான கோடிக்கு தேங்கிக் கிடக்கின்றன. எந்த அளவிற்கு, எத்தனை கோடிக்கு கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. :.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி ஏற்கெனவே விரிவாகப் பேசி அதற்கு புள்ளி விவரங்கள் எல்லாம் தரப்பட்டு இருக்கின்றன. ஜனதாவிலே நில்லுங்கள்.

திரு. இரா. மோகன்: கேள்வி கேட்பதற்கு அனுமதித்தால் தான், தலைவர் அவர்களே, நாங்கள் கேள்வி கேட்க முடியும். ஆகவே இப்படிப்பட்ட கைத்தறித் துணிகள் தேக்கத்தை நீக்குவதற்காக எந்தெந்த நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. மத்திய அரசோடு தொடர்பு கொண்டு நிதியாதாரங்களைப் பெறுவதற்கான திட்டங்களும், இந்தத் தேக்கத்தைப் போக்குவதற்கான திட்டங்களும் என்னென்ன இருக்கின்றன என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: தலைவர் அவர்களே, கைத்தறித் துணி, தமிழகத்தில் கோ-ஆப்டெக்ஸ் மூலமாக 115 கோடிக்கும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக 75 கோடிக்கும் தேக்கம் உள்ளது. துணித் தேக்கத்தை விரைவில் போக்குவதற்காக துரிதமான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். தள்ளுபடி சம்பந்தமாக மாநில அரசு மத்திய அரசுக்கு பல கடிதங்களை எழுதியிருக்கிறது. மத்திய ஜவுளி அமைச்சரை நேரில் சந்தித்து, இது சம்பந்தமாக, தள்ளுபடித் தொகை அதிகம் கிடைப்பதற்கு நாங்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

TRUTH ALONE TRIUMPHS